புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==============================================================================

# 'குன்னிமுத்து' நாவல் கூறும் இருளி பாத்திரமும், அடையாளம் இழந்த உடலும்

*ஸை. சந்தியாமோள்*
*பதிவுஎண் : 20113114022045*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் - 629165*

*முனைவர் செ.ரெ. ஜெஸ்லின் சஜி,*
*நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம்.*
*மனோன்மணியம் சந்தரனார் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.*

==============================================================================

*ஆய்வுச்சுருக்கம்:*

*'குன்னிமுத்து நாவல் கூறும் இருளிபாத்திரமும், அடையாளம் இழந்த உடலும்' என்ற தலைப்பில் அமைந்த இந்த ஆய்வுக் கட்டுரையின் முன்னுரை தமிழகத்தின் ஒவ்வொரு இடங்களிலும். காணப்படுகின்ற இருளி பெயரின் வேற்றுப் பெயர்களைக் குறித்துக் கூறுகிறது. தொடர்ந்து தமிழில் இதுவரையிலும் வெளிவந்த இருளி பற்றிய படைப்புகள் குறித்தும் அதனைத் தொடர்ந்து ஆமாரி இலக்கியம் தனியாக உருவாதல் குறித்தும் பேசுகிறது. குன்னிமுத்து நாவல் கூறும் இருளி பாத்திரத்தின் உடலரசியல் வரையறுக்கப்படும் விதம் குறித்தும் நாவலில் இருளி கதாபாத்திரம் பூப்பெய்யும் முயற்சியில் கனவின் வெளிப்படுத்தலாக அமைவதை நாவலாசிரியர் விவரிக்கிறார். இருளிக்கான உடல் அடையாளம் உடலாக மட்டுமே சமூகத்தில் பேசப்படுவதாகக் குன்னிமுத்து நாவல் குறிப்பிடுகிறது. குன்னிமுத்து நாவலின் குறியீடு மூன்று விதங்களில் அர்த்தம் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியில் இருளி பாத்திரம் அடையாளம் மறுத்தலுக்கு எதிராகவே திகழ்கிறது என்பதாக நிறைவு பெறுகிறது.*

*முன்னுரை:-*

*குமாரசெல்வா எழுதிய 'குன்னிமுத்து' நாவல் 2012 -ஆம் ஆண்டு காலச்சுவடு பதிப்பாக வெளிவந்துள்ளது. குறிப்பிட்ட வயது வந்தும் பருவத்திற்கு வராத பெண்குறித்து தமிழில் முதன்முதலாக எழுதப்பட்ட நாவல் இதுவாகும். குமரி மாவட்டத்தில் இவர்கள் 'இருளி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். குமாரசெல்வா தனது குன்னிமுத்து நாவலின் முதன்மைப் பாத்திரமாகத் திகழும் அந்தப் பெண்மணியை 'இருளி' என்ற பெயரிலேயே அழைக்கிறார்.*

*கோயில்பட்டி போன்ற பகுதிகளில் ஒலிக்குறிப்பில் சற்று மாறுதலாக "இருசி" என்று அழைக்கப்படுகிறார்கள். சில இடங்களில் 'இருடி' என்றும் அழைக்கப்படுவதுண்டு. கொங்கு வட்டாரத்தில் 'மரப்பாச்சி' என்ற பெயர் பயன்படுத்தப்படுவதைக் குறிந்து உமாமகேஸ்வரி எழுதிய சிறுகதைத் தொகுப்பான 'மரப்பாச்சி' என்பதிலிருந்து அறிந்து கொள்கிறோம். அதாவது மரத்தால் செய்த பொம்மையில் கண், வாய், மூக்கு இருப்பது மாதிரி எல்லா உறுப்புகளும் இருக்கும். ஆனால் ஒரு மரப்பாச்சியால் குழந்தை பெற முடியாதது போல இவர்களாலும் முடியாது என்பற்கான குறியீடே 'மரப்பாச்சி' ஆகும். செட்டிநாட்டுப் பகுதிகளில் இவர்கள் 'வறடு' என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். குழந்தை பெறும் பாக்கியம் இல்லாமல் வறண்டவர்கள் என்பது இதன் பொருளாகும்.*

*கவிஞர் மகுடேஸ்வரன் என்பவர் இதற்கு 'பூசாவு' என்ற பதத்தை உருவாக்கியிருக்கிறார். பூப்பெய்தல் என்பதற்கு இச்சொல் எதிர்ச்சொல்லாக அமைந்துள்ளது. எனினும் சாவு என்பது உடலின் இயக்கமின்மைமையைக் குறிப்பிடுவதால் அதனை இலக்கியத்திற்குப் பயன்படுத்த முடியாது.*

*தமிழில் இதுவரையிலும் வெளிவந்த இருளி பற்றிய படைப்புகள்:-*

*தமிழில் இருளி குறித்து விரல் விட்டு எண்ணும் படைப்புகளே வெளிவந்துள்ளன. சிறுகதைகளாக உமாமகேஸ்வரி எழுதிய 'மரப்பாச்சி', அம்பை எழுதிய 'காட்டில் ஒரு மான்' ஆகியவையே வெளிவந்துள்ளன. கவிதையில் சுகனியா என்ற பெண்கவிஞர் எழுதிய ஒரு கவிதை மட்டும் முகநூல் பதிவில் வெளியாகி இருக்கிறது. மேலும் பாரதிவாசன் என்பவர் சு.தமிழ்செல்வி ஓர் சிறுகதையில் இவர்களைக் குறிப்பிட்டிருக்கிறார் என்று எழுதியதோடு அந்தக் கதை எதுவென்று குறிப்பிடாமலும் செல்கிறார். நாவல் இலக்கியத்தில் குமாரசெல்வா எழுதிய குன்னிமுத்து நாவலில் மட்டுமே இவ்வகையான பெண்குறித்து முதன்மையாகவும். விரிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. நாவல் இலக்கியத்தில் குன்னிமுத்துக்கு முன்பாக ஏதேனும் படைப்புகள் இருக்கிறதா என்று அலசியபோது தென்காசியைச் சேர்ந்த முத்துக்குமார் என்பவர் 'ஆசான்கள்' என்றொரு நாவலை எழுதியிருக்கிறார் என்ற தகவலை எழுத்தாளர் பொன்னீலன் தனது பேச்சில் வெளிப்படுத்தியுள்ளார். அந்த நாவல் இப்போது விற்பனைக்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*ஆமாரி இலக்கியமென தனியாக உருவாதல்:-*

*01.04.2017-இல் சேலத்தைச் சேர்ந்த பொன்குமார் என்பவர் பாரதிவாசன் என்பவரது முகநூல் பதிவு ஒன்றை மேற்கோள் காட்டி முகநூல் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் இருளியைக் குறித்து தலித் இலக்கியம் போல, பெண்ணியம் போல 'ஆமாரி இலக்கியம்' என ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார். இது குறித்து பாரதிவாசன் கூறும்போது, "பாலியல் தொழிலாளிகள் குறித்துப் பேசி விட்டோம். திருநங்கைகள், திருநம்பிகள் குறிந்தும் பேசிவிட்டோம். பெண்கள் குறித்து, பெண் குழந்தைகள் மீதான பாலியல் அத்துமிறல்கள், விளிம்புநிலைப் பெண்களின் வலி, வாழ்வியல் குறித்தெல்லாம் நிறைய பேசியிருக்கிறோம், அல்லது பேசத்துவங்கி இருக்கிறோம். ஆனால் பேசப்படாத ஒரு பகுதி... வயது முதிர்ந்தும் பூப்படையாமல் காலம் கழிக்கின்ற அல்லது அதை தெரிவிக்காமல் திருமணம் செய்து கொடுத்து தாம்பத்யத்துக்கு தகுதியற்று வாழாவெட்டி பெயருடன் வாழ்கின்ற ஆமாரிகள் (இவர்களுக்கான பெயர் இதுதான் என்று கோவை சதாசிவம் சொல்கிறார்). இவர்கள் குறித்தான பதிவுகளோ கதைகளோ இருக்கான்னு தெரியலை. எனக்குத் தெரிந்து திருமணமே செய்து கொள்ளமல் இருக்கிறான்... தெரிந்தவர் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டிருக்கின்ற இருவர் குறித்து என்று நண்பர்களோடு விவாதித்துக் கொண்டிருந்தோம்." (முகநூல்பதிவு) என்று குறிப்பிடுவதிலிருந்து 'ஆமாரி இலக்கியம்' என்ற தலைப்பில் தனித்த ஓர் இலக்கியத்தை உருவாக்கும் முயற்சிக்கான ஈடுபாடுகள் தோன்றி வருவதை அறிந்து கொள்ளலாம்.*

*குன்னிமுத்து நாவல் கூறும் இருளி பாத்திரத்தின் உடலரசியல்:-*

*குன்னிமுத்து நாவலில் இருளி பாத்திரத்தின் உடலரசியல் வளமை இல்லாதவள் என்பதாக வரையறுக்கப்படுகின்றது. வளமை உள்ளவள் என்பது சமூகத்திலும், மதத்திலும் குழந்தைப் பேறுடைய பெண்ணை அடையாளப்படுத்தும் அரசியலாகவும் அந்தத் தன்மை இல்லாதவளின் உடலானது சமுதாயத்தால் அரசியல் ஆக்கப்பட்டு ஒதுக்கப்படுவதாக அமைகிறது. குன்னிமுத்து நாவல் கூறும் இருளி மீதான உடலரசியல் கூறுகளின் அடிப்படையில் ஆணாதிக்க மனோபாவம் வரையறுக்கும். பெண்ணுடலாக வகைப்படுத்தலாம். இரண்டாவதாக தனிஉடல் மீதான இருளியின் பார்வை குறித்தும் அறியலாம்.இருளி தன் உடல்மீது மரபான பார்வையை கொண்டிருக்கிறாள் என்பதைக் குன்னிமுத்து நாவலின் பல இடங்களில் இருந்து அறிந்து கொள்கிறோம். பிற பெண்களைப் போல் பருவமடையும் ஆசை அவளுக்கு இளமைப் பருவத்திலும், முதுமை அடைந்த பிறகும் இருப்பதாக குன்னிமுத்து நாவல் குறிப்பிடுகிறது. இளமையில் நேரடியாக உணர்வுகள், முதுமையில் கனவின் வெளிப்படுத்தலாக நாவலாசிரியர் விவரிக்கிறார். இளமையில் பங்கிராசு வைத்தியரிடம் மருத்துவம் பார்த்து பூப்பெய்யும் முயற்சியில் நேரடியாக ஈடுபடும் இருளி முதுமைப் பருவத்தில் காணும் கனவுகளிலும் அதனையே கொண்டு விளங்குகிறாள். இருளியின் முன்னால் இரட்டைக்காளை பூட்டப்பட்ட வண்டி ஒன்று வந்து நின்றது. அந்தக் காளைகள் யாருமே இல்லாமல் அவளை மட்டும் சுமந்து கொண்டு ஓடுகின்றன. அவள் தேவலோகத்தில் வந்து நின்றாள். இருளியின் முன்னால் காமதேனு என்ற பசு வந்து நிற்கிறது. அதன் உடம்பில் ஆபரணங்களும், வைரங்களும் ஜொலிக்கின்றன.*

காமதேனு எதைக் கேட்டாலும் கொடுப்பது கதையில் வரும் தொன்மமாகும். எனவே, இருளி அதனிடம் தனக்கு காளி வேண்டும் என்று கேட்கிறாள். காளி எதற்கு என்று பசு கேட்வே, இரத்தத்திற்கு என்கிறாள் இருளி. இரத்தம் எதற்கு என்று கேட்டது பசு. பசுவே! நீ பால் மட்டும் தான் தருவாய் என்கிறாள் இருளி. அதுவும் இரத்தம் தான் என்றது பசு. உடனே இருளி பால் உனது இரத்தம், நான் கேட்டது எனக்குத் தேவையான எனது இரத்தம், அதை உன்னால் தரமுடியுமா? என்றாள். உடனே பசு, காளி உனக்கு எப்படி இரத்தம் தருவாள் என்றதும் அவள் எனது குரல் வளையைக் கடித்தாலே இரத்தம் தானாக வந்து விடும் என்கிறாள் இருளி. பசுவுக்கு திடீர் கோபம் வந்து விடுகிறது. நான் கொம்பினால் குத்தினாலும் இரத்தம் வரும், பார்க்கிறாயா? என்று இருளியை முட்டித் தள்ளவே அவள் பாதாளக்கடலில் பொத்தென விழுகிறாள்.

இந்தக் கனவு நிலையின் வெளிப்பாடு என்பது இருளியின் மனதில் தான் வயதுக்கு வந்து இரத்த நிலையைக் காண வேண்டும் என்கின்ற அவள் மனதின் ஆசை நாவலில் கூறப்படுகிறது எனலாம். பசுவின் கொம்பு என்பது இங்கு ஆண்மைய வாதத்தைக் குறியீடாக எடுத்துரைத்தும் இருளியால் வெளிப்படுத்துவதும் ஆகும்.

இருளிக்கான உடல் அடையாளம் உடலாக மட்டுமே சமூகத்தில் பேசப்படுவதாகக் குன்னிமுத்து நாவல் குறிப்பிடுகிறது. நாவலாசிரியர் இதனை மிக நுட்பமாக வரையறை செய்கிறார். நாவலில் அவளது பெயரின் மீதான அடையாளத்தை உறவுகள் அழித்து விடுவதாக நாவலாசிரியர் சுட்டுகிறார். இருளி பிறந்த போது அவளுக்கு சூட்டப்பட்ட பெயர் சுந்தரி என்பதாகும். ஆனால், அவளை மணந்து கொண்ட வண்டாளம் என்னும் உதிரி வாழ்க்கை வாழும் மனிதன் ஒருவன் தனக்கு இருளி மனைவியாக இருக்கும் போது இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு வந்து அவள் மூலமாகப் பிறந்த பெண்ணுக்கு அப்பெயர் சூட்டப்படுகிறது. இதன் வாயிலாக சுந்தரி என்ற பெயரடையாளத்தையும் இருளி இழக்கிறள்.

தனது முதிர்வயதில் பாகாப்புக்காகவும், ஆறுதலுக்காகவும் அவள் பெந்தேகோஸ்து மார்க்கத்தில் இணைகிறாள். அவளுக்கு ஞானஸ்தானம் கொடுக்கும் பிரசங்கியார், பாக்கியமலர் என்ற அழகான பெயரை அவளுக்குச் சூட்டுகிறார். ஆனால் அந்தப் பெயரும் யாராலும் அழைக்கப்படாமல் ஒதுக்கப்படுகிறது. அவள் கடைசிவரை உடலாகத்தான் பார்க்கப்படுகிறாள். இது குறித்து நாவலாசியர் கூறும்போது அவள் இருளியாகப் பிறந்தது போலவே இருளியாகத்தான் இறக்கவும் போகிறாள் என்கிறார்.

குன்னிமுத்து நாவலில் உடலின் அடையாளத்தை ஒருபெண் தனது அடையாளமாக மாற்றிக் கொள்வதையும், உலகம் கூறிய அடையாளத்தை ஏற்றுக் கொள்வதையும் இருளி பாத்திரத்தின் வாயிலாகப் பல இடங்களில் சுட்டவும் செய்கிறது. அது வெறும் உடலாக மட்டுமல்ல, உறவாகவும் அமைவது தான் குறிப்பிடத்தக்கது. இருளி வாழ்வில் தனக்குரிய ஒரே உறவாக அவள் தந்தையை மட்டுமே நினைத்துக் கொள்கிறாள். பிற்காலத்தில் தனது கணவன் வழி இன்னொரு பெண்ணுக்குப் பிறந்த மகளைத் தனது மகளாக ஏற்றுக் கொள்கிறாள். தனது தந்தையான பாச்சாடியைக் கணவனான வண்டாளம் என்பவன் ஆறாயிரம் ரூபாய்க்காகக் கொலை செய்கிறான். அவரது இரத்தத்துளிகள் ஈயக்குண்டு பாறையின் மேல் சிதறிக்கிடப்பதைப் பார்க்கும் போதுதான் தனது உடலில் இருந்து வெளிப்படாத இரத்தம் தந்தையின் இரத்தமாக அர்த்தப்படுத்தப்படுகிறது.

ஈயக்குண்டு பாறை என்பது இருளியின் வீட்டுக்குப் பின்புறத்தில் உள்ள பாறை ஆகும். அதில் கண்ணீர்த்துளி ஊற்று ஒன்று காணப்படுகிறது. அதற்குத் தெற்கே உயர்ந்தோங்கி நிற்கும் மகாகனி மரங்களில் படர்ந்து தெறித்துக் கிடக்கும் குன்னிமுத்துக்கள் ஒரு பாறையையே முழுவதுமாக மூடி இரத்தமலையின் தோற்றத்தைத் தந்தது. அதைப் பார்க்கும் போதெல்லாம் இருளிக்கு அழுகை அழுகையாய் வரும் என்கிறார் நாவலாசிரியர்.

சிதறிக் கிடக்கும் குன்னிமுத்துகள் இருளிக்கு இரத்தத் துளிகளாக அர்த்தப்படுவதை வாசிப்பவரால் உணர்ந்து கொள்ள முடியும். இயற்கை அவளுக்குள் இருந்து இரத்தம் கக்குவதாக இருளி தனக்குள் கற்பித்துக் கொள்கிறாள். இதன் வாயிலாக தனது உடலில் இருந்து விலகிப்போன ஒன்றுடன் அவன் தன்னை இணைத்துப் பார்ப்பதாக குறிப்பிடுகிறார் நாவலாசிரியர். இருளியுடன் குடும்பம் நடத்தும்போதே சில நாட்கள் பக்கத்து ஊர் சென்று ஒரு பெண்ணை மணந்து கொண்டு தனது வீட்டிற்கு அழைத்து வருகிறான் வண்டாளம். அந்த நள்ளிரவில் கும்மிருட்டில் இருளியை வெளியே அடித்து துரத்துகிறான். வீட்டின் படிநடையில் இருக்கும் அவள் கண்காண இன்னொரு பெண்ணுடன் உறவு கொள்கிறான். அதைக் காண

சகிக்காத இருளி பக்கத்து விளையில் வந்து கற்றாழை முட்களை ஒடித்து தனது பெண்ணுறுப்பில் குத்தி இரத்தம் வரவழைக்கிறாள். இரத்தம் வந்ததும் வெறிபிடித்தவள் போல தான் வயதுக்கு வந்துவிட்டதாக உரத்த குரலில் சத்தம் போடுகிறாள். இந்த இடத்தில் உடலின் அடையாளமானது பொய்த்தன்மையால் காணமுயன்ற இருளியின் அறியாமையைக் காட்டுகிறது. இது மறுக்கப்படும் உடல் அடையாளத்தின் அடிப்படையில் உருவானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இருளி கதாபாத்திரம் தனது துயரத்தில் நிறைவு பெறாமல் துணைக்கென சுந்தரியை ஏற்றுக்கொள்கிறது.ஆனால் அதுவும் அவளை விட்டுப் பிரியும் நிலை ஏற்படுகிறது. ஆனால் அந்தப் பிரிவானது நிறைவு பெறும் வகையில் அமைகிறது. சிறு வயதிலேயே கஷ்டப்பட்டு படித்த தினேஷ் என்பவனை சுந்தரிக்கு அவனது தகப்பன் தங்கநாடானால் மருமகளாக ஏற்றுக் கொள்ள நினைக்கும்போது அதற்கு இருளி ஒப்புக்கொள்ளவும் செய்கிறாள். முதலில் தங்களது பொருளாதார நிலையைக் காட்டி மறுத்தாலும் இறுதியில் அந்தத் திருமணம் நடக்கிறது. அதன்பிறகு இருளியின் வாழ்க்கை தனிமையாகிறது. ஆனால் தாய்மையின் நிறைவை அனுபவித்த நிறைவில் இருளி அதையும் விரும்பி ஏற்கிறாள்.

குன்னிமுத்து என்பதன் குறியீடு:-

குன்னிமுத்து நாவலில் இக்குறியீடு மூன்று விதங்களில் அர்த்தம் கொள்கின்றன. இருளி உடலைத் தனதாகவும் தனது தகப்பனாகவும் இயற்கையாகவும் மூன்று நிலைகளில் அடையாளம் காண்பதாக நாவலாசிரியர் உருவாக்கியிருக்கிறார்.

உடலின் அடையாளம் என்பது நிழலாக இயற்கையில் காணும் பொருட்களோடு இருளியின் மனதில் படிமம் போல உறைந்து இருப்பதாக நமக்கு உணர்த்துகிறது. எனவே தான் அவளது எண்ணத்தில் சிவப்பு நிறங்களைக் காணும் போதெல்லாம் ஊனமான தனது உடற்குறைச் சமனப்படுத்துவதாக அர்த்தம் கொள்கிறார். காவுகளில் பூத்துக் குலுங்கி நிற்கும் செம்பருத்திப் பூவும் வளர்ப்புமகள் சுந்தரி பள்ளியிலிருந்து பருவமடைந்து திரும்பும் போது இருளி காணும் முருக்கு மரத்தின் சிவப்புப் பூக்களும் இதற்கு உதாரணங்களாகும்.

முடிவுரை:-

பொதுவெளி இல்லாத பெண்ணுடலாக இருளி பாத்திரம் நாவலில் திகழ்கிறது. கோயிலில் பாதை வழியே செல்லும் போது, வாழும் பெண்கள் இருக்கும் இடத்தில் வரடுகளை யார் உள்ளே விட்டது? என்று இருளி நாவலில் ஒதுக்கப்படுகிறாள். வண்டாளத்தால் அவளுடல் துன்புறுத்தப்படுகிறது. உரையாடல்களிலும் அவள் உடல் சார்ந்து ஒதுக்கப்படுகிறாள். உலகில் பெண்ணாகப் பிறந்தவள் வாழ்க்கைப்பட்டு குழந்தை பெறுவதுடன் முடிவடைந்து விடும் வாழ்க்கையில் குழந்தைப் பேறற்றவளின் தாய்மைப்பண்பு இங்கு முன்னிலைப்படுத்தப்படுகிறது.இதையெல்லாம் மீறி அனாதையாக விடப்பட்ட தனது கணவனுக்கு இன்னொரு பெண் வாயிலாகப் பிறந்த பெண்ணான சுந்தரியை வளர்த்து ஆளாக்கித் தாய்மையை இன்னொரு விதத்தில் சரிசெய்யும் இருளி பாத்திரம் அடையாளம் மறுத்தலுக்கு எதிராகவே திகழ்கிறது.

பார்வை நூல்கள்:

1. தமிழ்நாவல்களில் பெண்ணியம், அரங்கமல்லிகா, இரண்டாம் பதிப்பு – பிப்.2013, நியுசெஞ்சரி புக்ஹவுஸ்,சென்னை - 600 098.
2. குமாரசெல்வா, எஸ்.எஸ்.ஷீபா, 2015, கலைஞன் பதிப்பகம்,19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை -600 017.
3. குன்னிமுத்து, குமாரசெல்வா, இரண்டாம் பதிப்பு, டிச.2012, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், 669,கே.பி.சாலை,நாகர்கோவில்-629 001.

இதழ்கள்:-

1. இடைவெளி, இதழ் 4, ஆகஸ்ட் 2018.
2. விகடன், தடம்,டிசம்பர் 2017.

முகநூல் பதிவு:

பொன்குமார். 01-04-2017.

********* ********* ********** ********* ********* ********** ********** **********